12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி

11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி



இந்துமதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரார்



மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோவிலைக்
கட்டிய சித்தர்
காவிரியாற்றங்கரைக் கருவூரார்

# குருதேவர்

(காணிக்கை ரூ 1—00)

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை

(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ. ம. இ. பதிவு எண்: 135/83

## இந்துமத வரலாற்றுப் பேருண்மைகள்

இந்துமதம் :

(I) பிறப்பிடம் : ‘இளமுறியா’ கண்டம் (The Last Lemuria) எனும் கடலில் மறைந்த ‘குமரிக்கண்டம்’

(II) காலம் : பதினெண் சித்தர்களால் அனாதி காலத்தில் 43, 78, 085 ஆண்டுகளுக்கு முன்னால் தோற்றுவிக்கப்பட்டது.

(III) மொழி : தமிழ் மொழி

(IV) வழிபாட்டு நிலையம் : 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள் 1008 வகைச் சிவாலயங்கள்

(V) இந்துமதக் காவலர் : 48 வகைப் பதினெண் சித்தர் பீடாதிபதிகள்

'ஞாலகுரு சித்தர் கருவூரர் எழுதும்'

# சித்தர் இராமாயணம்

## ஆய்வுக்கட்டுரை—முன்னுரை (2)

அதேபோல், 'பெருந்தேவனார்கள்' என்பவர்கள் பரம்பரையாகச் சந்திர குலத்துக்குரிய (கருவூரர் பரம்பரை) செய்திகள், கதைகள், வரலாறுகள்......முதலிய அனைத்தையும் (சிவன், முருகன், இவர்களைச் சார்ந்தவர்கள், இவர்களின் பாண்டிய அரச பரம்பரை, கருவூரர்கள் வரலாறு, கண்ணன் கதை, பாரதப்போர் இன்னோரன்ன பிறவும்) தினைத்தாள் குடிசையிலும், பந்தலிலும் வாழ்ந்து, தினைப்பாயில் துயின்று, தினைச்சோறும், கலவை இறைச்சியும் உண்டு சந்திரகுலச் செய்திகளைக் கண்ணன காதையாகப் பலவண்ணங்களில் பாடினார்கள்.

இருபத்தேழுவகைப்பட்ட இலக்கியங்கள் கம்பர்களாலும், பெருந்தேவனார்களாலும்தேவைக்கேற்ப இயற்றப்படுவதும் வாசிக்கப்படுவதும்ஓதப்படுவதும், விரித்துக் கூறப்படுவதும், பாடிக்காட்டப்படுவதும், கூத்தாக ஆடிக்காட்டப்படுவதும் நாடகமாக நடித்துக் காட்டப்படுவதுமாக நவநாத சித்தர்களில் புகழ்பெற்ற இராமதேவர் காதையும் கண்ணதேவர் காதையும் இந்து மதம் காக்கும் கைகளாக இருந்து வருகின்றன.

சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் தமது குறிப்பில்"... வட ஆரியர்களால் மதுரை மாநகர் கண்ணகி காலத்தில் முழுமையாக அழிக்கப்பட்டபோது தமிழிச் சங்கமும், புலவர் இருக்கைகளும், பட்டி மன்றங்களும், படியெடுக்கும் மாளிகைகளும், சுவடிக் காப்பகங்களும எரியூட்டப்பட்டதாலும; எண்ணற்ற சங்கப் புலவர்களை வெட்டிக் கொலை செய்யப்பட்டு விட்டதாலுமே கம்பர்களையும், பெருந்தேவனார்களையும் கொண்டு இருபத்தேழு வண்ணங்களில் இராம காதையையும் கண்ணன் காதையையும் நூல்களாக்கினேன்......" என்று காணப்படுகின்றது

மூன்று உகங்களிலும் சிவன், முருகன், இராமன் நிகழ்த்தியப் போரின அழிவுகளைவிட, கண்ணன் நிகழ்த்தியப்போரின அழிவே மிகப் பெரியது. எனவே பார் = உலகம்; அதம் = அழிவு (சிறப்புக் குறிப்பு;பேரழிவு, நிகழாத அழிவு) பார் + அதம் = பாரதம் 'இம்மண்ணுலக அழிவு' என்னும் பொருளுடைச் சொல்லால் குறிக்கப்படும் வழக்கு பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் ஏற்பட்டது.

காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குறிப்பிலிருந்து (காலம் எட்டாம் நூற்றுண்டு) "......தமிழர்கள் இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப்பற்று, நாகரீகப்பற்று இந்துமதநம்பிக்கை ......முதலியவைகளை இழந்து சோனகர், யவணர், பாரசீகர், சீனர், வட ஆரியர்...... முதலியவர்களின பணத்துக்கும், பதவிக்கும் புகழுக்கும், பேராசை கொண்டு அடிமைகளாக, கூலிகளாக வாழ்கின்றனர். இவர்களால் சிவன், முருகன், கண்ணன், அம்மன் கோயில்களில் இருந்த பெருந்தேவனார்களும்; தேவர்கள், இராமன், அனுமன், திருமால், பெருமால், இராமேச்சுரங்கள்......முதலிய கோயில்களிலிருந்த கம்பர்களும் செல்வாக்கிழந்து செயலிழந்தனர். பதினெண் சித்தர் பீடாதிபதிகள் வகுத்த குருபாணி முறைப்படி குருமார்கள் ஓதுதலும், குருக்கள்கள் வாசித்தலும் வழக்கொழிந்தன. அருளோடு கோயில் நிர்வாகங்களை நிகழ்த்துதல் மங்கித் தேங்கி மறையலாயின.

எனவேதான், அரும்பெரும் முயற்சிகளால் பாரதக் காதைக்குரிய இருபத்தேழு வண்ண நூல்களும் தொகுக்கப்பட்டு மாணமதுரைக் கோயிலிலிருந்த பெருந்தேவனாரிடம் கொடுக்கப்பட்டுப் பாரதம் மீண்டும் எழுதிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

—தொடர்ச்சி 7 பக்கம்

# குருதேவர்

[இயக்க அறிக்கை]



சொல்லடி நாயனார்
பெரியார் ஈ. வெ.ரா.



போத்தர் மோகன்தாசு
கரம்சந்த் காந்தி



நவநாத சித்தர்
காரல்மார்க்சு



ஞான சித்தர்
ஆதி சங்கரர்

---

## வணக்கவுரை!

புதிய பொலிவுடன் நமது அறிக்கை தொடர்ந்து வெளிவரும் என்று உறுதி கூறுகின்றோம். மேலும் மேலும் பல புதிய சுவையான ஆராய்ச்சிக் குறிப்புக்களையும், வரலாற்று பேருண்மைகளையும் தொடர்ந்து வழங்கிட உள்ளோம்.

'சித்தர் இராமாயணம்' - ஞாலகுரு சித்தர் கருவூராரால் பலமான கருத்துலகப் போராட்டங்களினிடையில் தொடர்ந்து எழுதப்பட்டுவருகிறது: இராமாயணத்தைப் பற்றியும், அதன் காலநிலை, இலக்கிய நிலை, நூலாசிரிய நிலை, சமகால சமுதாயச் சூழ் நிலை, பிற்காலத்தில் நடைபெற்ற அரசியல் தாக்குதல் ஆகிய பல்வேறு உண்மைகள் விளக்குவதற்காகவே 'முன்னுரை' பகுதி நீட்டிக்கப்படுகின்றதுஎன்பதைதெரிவித்துக் கொள்கின்றோம்.

சித்தர் இராமாயணம் சம்பந்தப்பட்ட ஐயவினா, அறிவு வினாக்களை எம்முடைய முகவரிக்குத் தெரியப்படுத்தினால் உடனே பதிலனுப்புகின்றோம். உடனே பலருக்கும் நமது அறிக்கையை அறிமுகப் படுத்துங்கள்

வரும் குருதேவரின் 49-வது பிறந்த நாளை தமிழரின்-மனித குலத்தின் தன்னுரிமையை மீட்கும் நன்னாளாகக் கொண்டாடுவோம்.

—சி. கவிக்குமார்

அறிக்கை: 9 வெளியீடு 26-8-84

இ. ம. இ. பதிவு எண் 135/83

[பண்பாட்டுக் கழகம்]

ஆசிரியர் குழு:

இ. ம. இ; அ. வி. தி; க. வ. க; அ. ஆ. க; உ. ம. ஆ. கு. முதலியவற்றின் வட்டாரத் தலைவர்கள்.

---

தொடர்பு:

1. பரமாச்சாரியார்: நெ. சேவுகன்
   C/o. காதிவகுத்திராலயம்
   கொட்டாம்பட்டி [P O] Pin-625 103

2. பிறமாச்சாரியார்:
   சி. கவிக்குமார் B.Sc.,
   56, N. G. O. காலனி
   பொன்னேரி 601 204.

3. தெய்வீகாச்சாரியார்:
   சோ. இரவீந்தரன்
   C/o. சித்தர் E. S. I.
   செம்பியம், பெரம்பூர்,
   சென்னை-600 011.

## உண்மையான இந்து மத உயர்ச்சிக்காக வட ஆரிய வேத நெறிக்கு கண்டிப்பு (தொடர்ச்சி)

முதலிய பல அமைப்புக்கள் எம்மால் தோற்றுவிக்கப்படுகின்றன.

2 காயந்திரி மந்தரம் என்பது பதினெண் சித்தர்கள், தனிமனிதர்கள் பத்திநிலை, சத்தி நிலை, சித்திநிலை, முத்திநிலை என்கின்ற நான்கு வகைப்பட்ட நிலைகளிலும் முறையான வளர்ச்சிகளையும் முழுமையான வளர்ச்சிகளையும் பெற்றிடவே உருவாக்கிய அருளூறுப் பூசாமொழி வாசகம்

இக் காயந்திரி மந்தரம் சித்தர்களில் மண்ணை, பொன்னை, பெண்ணை மறுத்து வாழும் ஞானசித்தர் எனப்படும் தனித்தத் தத்துவப் பித்தர்களும் ஓதிப் பயனடையும்படி உருவாக்கப்பட்டது.

குறிப்பு:- பதினெண்சித்தர்கள் மரபுப்படி மண், பெண், பொன் மூன்றையும் வெறுப்பவர்கள் ''இளமையிலேயே இல்லறம் ஏற்காமல் துறவறம் ஏற்பவர்களைப் போல'' நேரடியாக எந்தப் பூசைகளையும் செய்ய முடியாது செய்யக் கூடாது என்பது விதியாகும். அதாவது இவர்கள் பூசாறி, அருளாளி, மருளாளி, குருதேவர், குருக்கள் குருமார், பண்டாரம்......ஓதுவார் இவர்களில் யாரேனும் ஒருவரை நாடித்தான் தமக்குரியப் பூசைகளைச் செய்துவரவேண்டும் இவர்கள் அருளுலகில்யாரையும் வாரிசுகளாக உருவாக்கமுடியாது. புதிய வழிபாட்டு நிலையங்களை உருவாக்கவும் முடியாது. எனவேதான் இப்படிப்பட்ட ஞான சித்தர்களும் துறவிகளும் கூட அருட்சத்தியடைய வேண்டுமென்பதற்க்காகவே பதினெண் சித்தர்களால் காயந்திரி மந்தரம் படைக்கப்பட்டது.

4. மண், பெண், பொன் இவற்றை வெறுப்பவர்களும், துறப்பவர்களும் அதாவது ஞான சித்தர்களும், துறவிகளும் இறைச்சியுணவை (மாமிசம், புலால்) மறுப்பவர்களாகவே இருந்திடுகின்றார்கள் இவர்கள் பதினெண் சித்தர்களின் முறைப்படி மீன், புறா, ஆடு, கோழி......முதலியவைகளைப் பலிகொடுத்துப் பூசை செய்ய முன் வருவதில்லை விரும்புவதில்லை. ஆனால் அருளுலக நாட்டமும் ஆர்வமும் உடையவர்களாக இருப்பதால் இவர்களும் அருளை அநுபவப் பொருளாக அடைந்து சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் சிறிதளவாவது பெறவேண்டும் என்ற கழிவிரக்கத்தால்தான் பதினெண் சித்தர்கள் இந்த காயந்திரி மந்தரம் என்ற ஒன்றை அருட்கொடையாக வழங்கி இதனை ஆறுகாலம் ஓதுபவர்கள் ''மனித வாழ்வுக்குத் தேவையான சத்திகளைப் போதுமான அளவு'' பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள்

குறிப்பு: காயந்திரி மந்தரத்தால் மனித வாழ்வுக்குத் தேவையானச் சத்திகளைத்தான பெறமுடியுமே தவிர; மிகப் பெரிய அருளுலகச் சத்திகளை பெற முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது

❁ ஆனால் வட ஆரிய வேத நெறியினர் இன்றைக்கு கண்மூடித்தனமாக குருட்டுத்தனமாக, மடத்தனமாக அனைவரையும் தவறான வழியில் வழிநடத்துகின்ற முறையில், காயந்திரி மந்தரத்தைச் சொன்னால் அனைத்துச்சத்திகளையும், சித்திகளையும் முத்திகளையும், பெறலாம் என்று கூறி வருகின்றனர். இதனை நம்பி கெட்டுப்போனவர்களும், நலிந்து போனவர்களும் இந்து மதத்தை மறுப்பவர்களாகவும் எதிர்ப்பவர்களாகவும் ஆகிவிடுகின்றார்கள் எனவே இந்து மதத்தைக் காப்பாற்றுவதற்காக இ. ம. இ. காயந்திரி மந்தரத்தைப் பற்றிய தவறான செய்திகளைக் கண்டிக்கின்றது இனியாவது வட ஆரிய வேத நெறியினர் திருந்தட்டும் இல்லையேல் வட ஆரியர்களை இந்து மத விரோதிகளாகவும்; துரோகிகளாகவும்கருதி எதிர்த்துப்போரிட நேரிடும்

—தொடரும்

# செம்மலருக்கு விளக்க பதில்

தலைமையாசிரியர் சித்தரடியார் ஏ. இரவி

பொன்னேரி 3—8—84

1. எங்களுடைய அதாவது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அ.வி.தி.செயல் நிலையம் (No 8 அருள்தாசபுரம், தத்தனேரி மதுரை-18) உங்களுடைய அச்சகத்தின் அருகில் இருந்தும் தாங்கள் எங்களை விமர்சித்து கட்டுரை வெளியிட்டது (செம்மலர், சனவரி 1984, சரம் 14 மலர் 9 பக்கம் 3 முதல் 7 முடிய தலைப்பு:- வேஷங்கள், சி. ஐ. ஏ யும் நவீன மதப் பிரச்சாரங்களும்) இதுவரை எங்களுக்குத் தெரியாது.

2. இன்று 1-8-84 நண்பர் ஒருவர் தங்களுடைய சனவரி மாத செம்மலரைக் கொண்டு வந்து கொடுத்து; எங்களை நீங்கள் சி. ஐ. ஏ. உளவாளிகள் என்று குற்றம் சாட்டியிருப்பதற்கு விளக்கம் கேட்டார் அவருக்குரிய விளக்கத்தை உங்களுடைய செம்மலரிலேயே வெளியிட்டால் நல்லது என்பதால் இக்கட்டுரையை எழுதுகிறோம் தாங்கள் இதனை வெளியிடுவீர்கள் என நம்புகிறோம் அல்லது பதிலாவது எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

3. எங்களுடைய இயக்கம் இந்து மறுமலர்ச்சி இயக்கம் இதன் கீழ் அருட்பணி விரிவாக்கத் திட்டம், உலக அருளாளர் திருச்சபை, அருளுலக ஆர்வலர் கழகம், கடவுளை வழிபடுவோர் கழகம், உலக மத ஆய்வுக்குழு...... என்று பல அமைப்புகள் இருக்கின்றன இவையனைத்தும் இந்தியாவில் மற்றுமின்றி உலகமெங்கும் 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைய வேண்டுமென்று பாடுபடுகின்றன. இத்துடன் மடமையற்ற, மூடநம்பிக்கையற்ற, கண்மூடிப் பழக்கவழக்கங்களற்ற, பயனற்ற சாத்திரச்சம்பிறதாயங்களற்றதேவையற்ற சடங்குகள்இல்லாத,சுரண்டலற்ற,ஏமாற்றலற்ற,சர்வாதிகாரமற்ற,தன்னலமற்றஊழலற்ற,பகுத்தறிவுப்போக்குடைய விஞ்ஞான நோக்குடைய உண்மையான இந்து மதத்தை உலகுக்கு அறிவித்து அதனை மறுமலர்ச்சி அடையச் செய்வது நோக்கம் ஏனெனில் இந்து மதத்தின் மூலம்தான் 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை' உண்டாக்கமுடியும்.

உலகம் முழுதுமுள்ள எல்லா இனங்களும் விடுதலையோடு மொழியுரிமையோடு பண்பாட்டுத் தன்னுரிமையோடு, நாகரீகப் பாதுகாப்போடு, கூடிவாழும் கூட்டாட்சி முறையை உருவாக்கவேண்டும் அரசியலே இல்லாமல் நேர்மையான, வலிமையான சமுதாயக் கட்டமைப்புக்களோடு மட்டுமே மக்களாட்சி நிகழ்ந்திடல் வேண்டும் என்ற சமுதாயச்சிந்தனையாளர்களான பதினெண் சித்தர்கள் படைத்ததே இந்து மதம். தாங்கள் மேலைய நாட்டு மதங்களை மயக்கப் பொருள் என்று கார்ல்மார்க்சு கண்டித்த அதே வாசகத்தை இந்து மதத்திற்கும் பயன்படுத்துவது பொருத்தமாகாது

4. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தபோது இங்குள்ளவற்றை தங்களுடைய ஆங்கிலமொழிச் சொற்களால் குறிக்க ஆரம்பித்தார்கள் கவிஞர்களை -Poets, ஓவியர்களை - Artists, நடனமாடுபவர்களை - Dancers, பாடுபவர்களை - Singers, சொற்பொழிவாளர்களை – Oraters, என்று தங்கள் மொழிச் சொற்களிலேயேக் குறித்துக் கொண்டார்கள் இதை யாரும் தவறென்று மறுக்க முடியாது. இது அவர்களுடைய மொழியுரிமை. இதைப் போலவே மேலை நாட்டில் பதினெண் சித்தர்களின் 'மக்களின் தொண்டே மகேசன் தொண்டு'' என்ற தத்துவத்தின் முழுமையான விளக்கமாகவும், முறையான செயல்வடிவமாகவும் கம்யூனிச சித்தாந்தம் என்ற பெயரிலே வெளியிட்ட 'கார்ல்மார்க்சை' தமிழ்மொழிக்கே உரிய இத் தத்துவ விளக்கச்

சொல்லான ''நவநாத சித்தர்'' என்ற சொல்லால் குறித்திருப்பதில் என்ன தவறு? கார்ல்மார்க்சின் கருத்துக்குதமிழ்மொழியில் இடப்படுகின்ற பெயர்தான் நவநாத சித்தரியல் (or) நவநாத சித்தரிசம் எனவே கார்ல்மார்க்சைப் பற்றிய தவருனக் கருத்தைப் பரப்புவதற்காக அவரை நவநாத சித்தர் என்று பெயரிட-வில்லை இதற்கு மேலும் விளக்கம் தேவை-யென்ருல் எங்களுடைய வெளியீடுகளைப் பார்க்கவும்

இதே போல் தமிழனத் தலைவர் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால்தான் வட ஆரியர்களின் ஆபாசக் கற்பனைகள், மூடப் பழக்க வழக்கங்கள், சுரண்டல்மிகு சாத்திறச் சம்பிறதாயங்கள், அண்டப்-புளுகுகள், ஆகாயப் பொய்கள், ஆபாசப்-பொய்கள் நிறைந்த வேதநெறி மிகுந்த இந்துமதத்தை பதினெண் சித்தர்களின் பகுத்தறிவு நிறை இந்துமதமாக மாற்ற முடிந்தது. இந்துமதத்தில் வடஆரியர்களின் வேதநெறியால் நிகழ்ந்து வந்சூழ்ச்சிகள், சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், அடிமை முறைகள், முதலாளித்வ போக்குகள்..... முதலிய அனைத்து கேடுகளும் சிந்தனைச்-சிற்பி, பகுத்தறிவுப் பகலவன், பெரியார் ஈ. வெ. ரா. வால் தான் ஒழிக்கப்பட்டன. இந்து மதத்திலிருந்து வந்த சைவ-வைணவச் சண்டை (or) போராட்டம் பெரியார் ஈ. வெ. ரா. வால் தான் முடிவுக்கு வந்தது அமைதியை அடைந்தது. இதுபோல இந்து மதத்துக்கு எண்ணற்ற நன்மைகளும், பயன்களும் பெரியார் ஈ. வெ. ரா. வால் தான ஏற்பட்டது. பெரியார் ஈ. வெ. ரா. தான தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும். தமிழர்தான் அர்ச்சகராக இருக்க வேண்டும். கோயில் நிர்வாகம் தமிழரிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்றெல்லாம் போராடினர். எனவேதான் பெரியார் ஈ. வெ. ரா.-வை 64-வது நாயனாராக அறிவித்தோம் 'இதில் தவறு ஏதும் இல்லை' இன்னும் சொல்லப்போனல் கடைசித்தமிழன் உயி-ரோடு உள்ளவரை நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கும் தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. வை கோயி-லுக்குச் செல்பவர்கள் கூட நாயனார்கள் வரிசையில் கண்டு வழிபடவேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் எப்படித் தவருகும்? புரிய முற்படுக.

---

## சித்தர் இராமாயணம்

<u>சிறப்புக் குறிப்பு</u>

சித்தர் இராமாயணத்தில் 'இராமன்' என்று டண்ணகரம் 'றன்' னகரத்துக்குப் பதில் குறிக்கப்படுகிறது. இம்மண்ணுலகில் இரவிகுலம் நிலைத்த புகழைப் பெறுமாறு பிறந்த ஒகம். ஒகி, யோகி.........என்று இராமனின் பிறப்பியல் (சாதகம்) கணிக்கப் பட்டே இப்பெயர் வைக்கப்பட்டது.

அயோத்தி மன்னர்களிலேயே இரதம் ஓட்டுவதில் வல்லவன் 'அயரதன்' = தயரதன் என்று பெயர் பெற்ருன். இவனுடைய இயற்பெயர் 'அறவோன்' என்பதேயாகும்.

இரண்டாவது உகமான திரேதாயுகத்தில் 'இரதம்' ஓட்டுவது மிகச் சிறப்புக்கும் பெருமைக்கும், போட்டிக்கும், உரியதாக கருதப்பட்டது. மன்னர்கள் இரதம் ஓட்டுவதில் பெற்ற வல்லமையைக் கொண்டே பெயர்கள் வைக்கப்பட்டன. அயோத்தி மன்னன் பத்துவகையான தேர்களை ஓட்டிடும் வல்லவன் என்பதால் 'பத்துரதன்' என்றும், இலங்கை மன்னன் 'இலங்கேசன்', இலங்கேசுவரன் எனக் குறிக்கப்படுபவன் தன் எண்ணப்படி எந்த வகையான இரதத்தையும் ஓட்டும் கைவண்ணம் பெற்றிருந்தான் என்பதால் 'இரத+வண்ணன்' = இராவணன் எனப் பெயர் பெற்ருன்.

2ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் பாண்டியன் தவறால் அனைத்தும் அழிந்தன. இராமகாதைக்குரிய இருபத்-தேழு வண்ண நூல்களும்தொகுக்கப்பட்டுத் 'தேரழுந்தூர்' கம்பரிடம்கொடுக்கப்பட்டன 'கவிச்சக்கரவர்த்தி' மகனைக் கொன்ற 'ஒட்டக் கூத்தர்கள்' [கூத்தர் = தமிழி-னத்தைச் சேர்ந்த கூத்தாடும் கலைஞர்கள்; ஒட்டக் கூத்தர் = ஒண்ட வந்த அதாவது இந்தியாவுக்கு ஒட்டி வாழ (ஒண்டி வாழ) வந்த வட ஆரியக் கூத்தாடும் கலைஞர்கள், அதாவது பிருமணர் (பிற மண்ணினர்)] கம்பர் வாழ்ந்த கம்பங்காட்டையும், கம்பந்-தாள் வேய்ந்த தவக்குடிலையும், குடிலைச் சுற்றி வாழ்ந்த குருகுல இளம் கவிஞர்-களையும்,குருகுலத்தில் காக்கப்பட்ட இருபத் -தேழு வண்ண நூல்களையும் கொளுத்-தினர்கள் அவர் எழுதிய 48000 பாடல்-களில் 37000பாடல்களை அழித்து விட்டனர்

விசாலயனின் தவறால் கவிச்சக்கர-வர்த்தி பாடிய உத்தர காண்டம், இராம-காதை நீதிக்காண்டம் என்ற இரண்டு பெரும் பகுதிகளும் வட ஆரியரால் அழித்-தொழிக்கப்பட்டன. வட ஆரியரில் அரசுச் செல்வாக்குப் பெற்றிருந்தஒட்டக் கூத்தர் -கள் கவிச் சக்கரவர்த்தி கம்பரை நாட்ட-ரசங் கோட்டையில் கொலை செய்து புதைத்தார்கள். நார்த்தாமலைக்கோயிலுக்கு வந்த இச் செய்திகளின் உச்சக்கட்டமாகக் கரிகாலன் காட்டு மன்னார்குடியில் வட ஆரியரால் கொலை செய்யப்பட்டான்.

அம்பிகாபதிக்கு முரட்டாற்றங்கரை வெட்டுப் பாறையில் (மிரட்டாற்றங்கரை என்றும்பாடவேறுபாடுஉள்ளது) சமாதும், அமராவதிக்கு அவர் தீக்குளித்து மாண்ட உறையூர் வெற்றிவேல் தடக்கைக் காளி முன்னரும், கவிச்சக்கரவர்த்திக்கு கொலை செய்து புதைக்கப்பட்ட நாட்டரசங் கோட்-டையிலும் சமாது கட்டிய பிறகே மிஞ்சியி-ருந்த கம்பராமாயணப் பாடல்களையும்; நந்திவர்மப்பல்லவன் குடமுழுக்குப்போரில் கொணர்ந்தளித்த திண்டுக்கல் பெருந்-தேவனார் பாடிய பாரதத்தையும் (வல்லம் படுகையில் கொண்டு வந்துதந்தான்) நாடு முழுவதும்படித்துத் தமிழுணர்வும், தமிழின ஒற்றுமையும் தமிழர் உரிமை பேணும் தன்மான உணர்வும் தழைக்க ஏற்பாடுகள் செய்தோம்......''என்று குறிக்கின்றார்.

வட ஆரியர்கள் தமிழினத்தை நிலை-யாக அடிமைப் படுத்தத் தேவையான அளவு தமிழ் மொழியின் வரலாற்றையும் வளத்தையும் அழித்து விட்டனர். இனித் தமிழர்கள் இராமாயணம் தங்களுடைய மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும், அரசிய லுக்கும் உயிரானது என்ற பேருண்மை -யை உணரவே முடியாது...........என்ற இரங்கத்தக்க நிலை உருவாகிவிட்டது.

—தொடரும்

---

# கேள்வியும் நானே! பதிலும் நானே!

**1 உண்மையான இந்து மதம் சத்தி வழிபாட்டையே கூறுவது ஆண் இனத்தைப் பழிப்பதாகாதா?**

இது தவறு. இயற்கைக் கூறுகளின்படி ஆணால்தான் ஓடியாடி எங்கும் திரிந்து செயல்பட முடியும். இவனே தலைவன், தலைமகன், முதல்வன். ஆனால் பெண்ணில் -லாமல் இவனில்லை. பெண்ணடிமைத்தனம்,இழிவு, பழி, கட்டுபாட்டுக் கொடுமை .........முதலிய பண்புகள் தலைதூக்கி விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையுடன் மிகத்தெளிவாகத் திட்டமிடப்பட்டு இயற்கையின் கூறுகள், ஆற்றல்கள், மானுட உணர்வுகள், அறிவுகள், வாழ்வியல்கள் ......... முதலிய அனைத்தும் பெண்களின்

வழிபாடாக பெண்களின் வழியாகச் செழித்து வளர்வனவாக ............இந்துமதம் உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இருவரும் சமமாகக் கருதப்படுவதே இந்துமதம்

**2 'குரு' என்று குருதேவரைக் குறிக்கும் சொல் தமிழ்ச் சொல்லா?**

'குரு' — தமிழ்ச் சொல்லே இதற்கும் சமசுக்கிருதத்திற்கும் சம்பந்தமே இல்லே. இதற்கான 'வேர்ச்சொல்' (Root Word) தமிழில் இருக்கின்றன.

குரு=முளைப்பதற்குரிய முழுமையான கரு=குருத்து; குருத்தோலே=கருவோலே (இளம் ஓலே, ஆரம்ப ஓலே) குருவி-- மிகச்சிறிய ஆரம்பமான பறவையினம் இதுதான் முதலில் தோன்றிய பறவையினம். இது அனேத்து பறவைகளுக்கும் பொதுப்பெய -ராக உள்ளது. குருந்தம் அமைதியான, நிறைவான முழுமையான பனிக்கட்டிப் போன்ற குளிர்ச்சியான, பரந்த எல்லேயற்ற, விரிந்த, அனேத்துக்கும் மூலமான, முதலாக, ஒலியையுடைய எந்நேரமும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்ற தலேவனுன 'இறைவன்' குருந்தமரம்:- எப்போதும் செழிப்பாக இருக்கக் கூடிய மரம்.

குருந்த மர நிழலில் குருமார்கள் கல்வி போதிக்கும் மரபுடையது பண்டைத் தமிழினம். குருதி=உடலில் ஓடுகின்ற செந்நீர் - அதுவே உயிர். இதுவே அனேத்துக் கும் ஆரம்பம், அடிப்படை, முதல்.

**3 திருக்குறளே இயற்றிய திருவள்ளுவரைப் பற்றியக் கருத்தென்ன?**

இந்துமதத்தைத் தவிர வேறெந்த மதமும் பெண்களே பெண்களாகவே மதிக்க வில்லே. வழிபடும் இடங்களில் பெண்களே வரக்கூடாது என்று இசுலாம் மதம் கூறு கின்றது. கிறித்துவ மதத்தில் பிற்காலத்தன்றி முற்காலத்தில் பெண்ணே வழிபடுதலோ மற்ற சமுதாய நிகழ்ச்சிகளில் பெண்களே அனுமதிப்பதோ கிடையாது. அவ்வாறே தான் புத்தமதமும், சமணமதமும். பெண்ணே தெய்வமாக, சமுதாயவாதியாக, நல்ல ஆண்மகனே உருவாக்கும் தாயாக, தாரமாக, வலிமைமிக்க மறுமலர்ச்சிச் சிந்தனே கொண்டவளாக, இந்து மதம் தோன்றிய நாள் முதல் போற்றி வருகின்றது. இந்த அரிய கருத்துக்களே ஈரடி குறள்கள் பலவற்றில் பறைசாற்றியவர்தான் வள்ளுவர். அவர் நவநாத சித்தர்களில் ஒருவராகப் போற்றப்படுகின்றர்.

---

## சிந்திக்க !

'சித்தர் மருத்துவர்' என்ற தலேப்பில் அரிய பல செய்திகளடங்கிய 300 பக்க நூலொன்று அச்சிடத் தயாராக உள்ளது ஆர்வமுள்ளவர்களே ! அரசே!உதவிட முன்வந்தால் ஏற்போம்.

கடல் நீரால், கரையானல், நெருப்பால், பகைவரால்........, தமிழிலக்கிய இலக்கணங்கள் அழிந்த வரலாறு பேசியே காலங்கடத்தும் தமிழ் வாழ்க! முழக்கக் கூட்டமே ! சிந்தித்திடு! செயலாற்ற முன் வா!.

புகழுக்காக, பொருளுக்காக, பதவிக்காகத் தமிழ் வாழ்க என்று முழங்கும் வாய்வீச்சுக்காரர்களே! தமிழ் செழிக்க! தமிழினச்சாதனேப் பரணிபாட இச்சித்தர் மருத்துவ நூல் வெளிவர உதவிட முன் வா.

# அன்புள்ள சேவுக!

அன்பு சேவுக!

எம் வாழ்க்கை 'ஒரு தெய்வீக சோதனையே' [My Life is the Test of Divinity] யாம் நஞ்சுண்ட மேனியனாகவே வளர்க்கப் பட்டும், இம்மாஞாலம் முழுதும் பயிற்சி, முயற்சிகளில் தேர்ச்சிபெற்று முதிர்ச்சியுற்றும்; அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதி சக்திகள் சன்னிதானமாக இந்துமதத் தந்தையாக, குருமகா, சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூராராக, பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகச் செயல்பட்டும் இந்துக்களை ஒற்றுமைப் படுத்தவோ, ஒருமைப்பாடுபெறவோ, ஆட்சியுரிமையை பெறச்செய்யவோ....... முடியவில்லை..........இருந்தாலும், யாம், மேற்படி சாதனைகளுக்காக முயலவில்லை என்று எவரும் குறை கூறிடவே இயலாது.

இந்து மதம், பிறந்த நாட்டிலேயே மற்ற மதங்களால் வேட்டையாடப்பட்டும், அடிமைப்படுத்தப்பட்டும், தொடர்ந்து அரசியல்வாதிகளின் சுயநல வெறியால் இந்துமதத்துக்கு விரோதங்களும் துரோகங்களும் நிகழ்ந்தே வருகின்றன. இவற்றை நிலையாக தடுத்தும், முழுமையாகத் தீர்த்தும் இந்து மதத்தைக் காத்து இந்தியாவைச் சிதையாமல் காப்பாற்ற வேண்டுமேயானால் இந்திய விடுதலை வரலாற்றின் தத்துவ நாயகர்களாக விளங்கிய திரு எம். என். ராய், திரு. எம். பி. பிள்ளை என்ற இருவரும் விட்டுச் சென்றுள்ள வரலாற்றுக் குறிப்புக்களை வெளியிட்டேயாக வேண்டும். ஆனால், இந்து மதப் பிறப்பிடமான தமிழகமே இன்னும் தன்னுணர்வு, இன ஒற்றுமை, மொழிப்பற்று, மதநம்பிக்கை...... பெருமலிருக்கிறதே!?!.........

நண்ப! கடந்த பன்னிரண்டாண்டுகளாக யாம் மந்திரவாதியாக, சோதிடராக, குறிகாரராக, மருளாளியாக, அருளாளியாக, பூசாரியாக, மருத்துவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, எழுத்தாளராக............ எப்படி யெப்படி யெல்லாமோ செயல்பட்டும் கூடத் தன்னலக்காரர்கள், குறுகிய வெறியர்கள்,...... தங்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு முதலாளித்துவப் போக்கில் ஒதுங்கிவிட்டனர். எனவே, நாம், இம்மண்ணுலகுக்குத் தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு...... முதலிய அனைத்தையும் 'இந்து மதம்' எனும் 'சமூக விஞ்ஞானத்தால்' [The Induism is a Social Philosophy] வழங்கிய பதினெண் சித்தர்களின் நேரடி உரிமை வாரிசு என்ற முறையில் செயல்பட்டேயாக வேண்டும் இதற்காக இந்திய விடுதலை வரலாறு, விடுதலை பெற்ற இந்தியாவின் அரசியல் வரலாறு என்ற இரண்டையும் கண்டப்பகோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமி பிள்ளை, சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை, உலகக் கம்யூனிச இயக்கம் நிறுவிய அறிவியல் மேதை M. N. ராய் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் ஈ. வெ. ரா......முதலியோர் எழுதிய வாசகங்களையும், எழுதாக்கிளவிகளாக விடுத்துச் சென்ற வாக்குகளையும் முடிந்தவரை அடுத்தடுத்து வெளியிட்டேயாக வேண்டும். இந்த நாட்டு பதிப்பகங்களையும் அறிவுலகத்தாரையும் நம்பிப் பயனில்லை. யாம் எமது தாயகத்தில் ஓர் அன்னியனாகவே வாழ நேரிட்டிருப்பது தாங்க முடியாத வேதனையே! நமது ஆர்வலர்களை ஆதரவாளர்களாக்க வேண்டியதே நமது உடனடிக்கடமை.

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரார்
இந்து மதத் தந்தை

# 49 வது ஆண்டு பிறந்த நாள் செய்தி

இந்து மதத்தால்தான் இந்தியச் சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, குடும்ப வாழ்வு, தனிமனித வாழ்வு.........முதலிய அனைத்தும் தூய்மைப்படும், வாய்மைப்படும், உய்வுபெறும். அதாவது அனைத்து வகையான ஏற்றத் தாழ்வுகளையும், வேற்றுமைகளையும், வெறிகளையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும், அடிமை நிலைகளையும் இந்திய மக்கள் வாழ்விலிருந்து அகற்றும் வல்லமையும், வழி/முறைகளும், இந்துமதத்தில்தான் இருக்கின்றன எனவே, இந்துக்கள் தங்கள் தங்களின் குடும்பத்தின் காணிக்கையாக ஓர் இளைஞரை இந்துமத மறுமலர்ச்சிப் பணிக்காக வழங்கவேண்டும். இந்த இளைஞர்கள் தாய்மொழி அறிவும், சுறுசுறுப்பும், தன்னம்பிக்கையும், இந்து மதப் பற்றும், சமுதாய ஒற்றுமையில் நாட்டமும் உடையவராக இருந்தால் போதும். மிகவிரைவில் இந்துமதத் தத்துவ ஞானமும் புதவாழ்வியல் நடைமுறைப் பயிற்சியும் பெற்றுப் புதிய இந்துமதப் பேரரசை உருவாக்கிடலாம்.

இந்துமதம், பதினெண் சித்தர்களால் இளமுறியாக் கண்டத்தில் நான்கு உகங்களுக்கும் (யுகம்) முன்னால் அனாதிக் காலத்தில் வாழ்ந்த மணீசர்களை மனிதர்களாக்கிட இன்றைக்கு (1984), 43, 73, 085 ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப்பட்ட ஒரு மாபெரும் சமுதாய அரசியல் தத்துவம். இதனை மீண்டும் இந்திய மக்கள் தெரிந்தும் புரிந்தும் உணர்ந்தும் நம்பியும் செயல்படுவதைப் பொறுத்துத்தான், நல்ல வருங்காலம் உருவாகும்.

கலியுகத்தில் 2000 ஆண்டுகள் கழித்து இந்தியாவுக்குள் நுழைந்த வட ஆரியர்கள் தங்களின் வேத நெறியை இந்து மதத்தில் கலந்து உண்மையான இந்துமதத்தின் பயனபடுநிலைகளையும், அறிவியல் நிலைகளையும் பாழ்படுத்தி விட்டனர். இவர்களுக்குச் சித்தர்கள் பேச்சு வழக்கிலிருந்த மொழியைத் தமிழினடிப்படையில் எழுத்து, இலக்கியம், இலக்கணமுடைய சமசுக்கிருத மொழியைப் படைத்துக் கொடுத்தனர் இதனால் இவர்கள் தமிழ்மொழி இந்து மதத்தை விளக்குவதையும் வளப்படுத்தி வளர்ப்பதையும் எளிதாகச் சமசுக்கிருத மொழியின் மூலம் தடுத்துக்கெடுக்க முடிந்தது. எனவே, வடஆரிய வேதநெறியின் அண்டப்புளுகுகளையும், ஆபாசங்களையும், சூழ்ச்சி மிக்கச் சுரண்டல் போக்குகளையும், ஏமாற்றுக்கள் மிகுந்த சாத்திர-சம்பிறதாயச் சடங்குகளையும், தெய்வீக அருள் ஊறச் செய்யும் ஆற்றலற்ற செத்துப்-போன சமசுக்கிருத மொழியையும் வெறுத்த மக்கள்! எதிர்த்த மக்கள்!......... காலப்போக்கில் இந்து மதத்தையே வெறுக்கவும் எதிர்க்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் நாத்திகப் போக்கும் மதமறுப்பும், மதவிரோதச் செயல்களும், மதத் துரோகச் செயல்களும் மிகுந்து விட்டன.

உடனடியாகப் பதினெண் சித்தர்கள் படைத்தஉண்மையானஇந்துமதவரலாறு, இலக்கியங்கள், தத்துவங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், ஓதங்கள்......... சாத்திறச்சம்பிறதாயச் சடங்குகள், முறை-கள், நெறிகள், விதிகள், ஒழுகலாறுகள் ... முதலிய அனைத்தையும் பற்றி அச்சிட்ட புத்தகங்கள்,, நாளேடுகள், வாரஇதழ்கள், திங்கள் மலர்கள், ......முதலியவை வெளி வர ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அன்பு ஞாலகுரு சித்தர் கருவூரார்

---

குறிப்பு: 7–வது பக்கத்தில் 'சித்தர் இராமாயணத்தில்' குறிக்கப்பட்ட கரிகாலன் இராசராச சோழனின் தமையனான ஆதித்த கரிகாலனே ஆகும்.

# சின்னச் சின்னச் செய்திகள்!

● 5—9—84 அன்று மதுரை மாநகரில் 108–வது 'யாகப்பெருவிழா' அருள்தாசபுரத்தில் நடைபெற்றது. அவ்வமயம் மதுரை மாவட்டத்து மக்களினறி பிறரும் பெருவிருப்புடன் பங்கேற்றனர். சென்னையிலிருந்து குருதேவரின் பதிலிகளாக சித்தரடியான் கோதண்டபாணி, சித்தரடியார் யோகானந்த அடிகளார் அருள்மிகு கருமாரியம்மன் சன்னிதானம் இருப்பாளர் ந. சண்முகம் அவர்கள் தலைமையில் சென்று கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

● சென்னை சூரப்பட்டில் கட்டப்பட்டு வந்த 'சிவலிங்க யாக மேடை' நீண்ட முயற்சிகளுக்குப்பின்னால் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. விரைவில் பதினெண் சித்தர்களின் முறைப்படி 'குடமுழுக்கு' செய்யப்படும்.

● வரும் அக்டோபர் மாதம் பத்தாம் நாள் குருதேவரின் 49-வது பிறந்த நாள். அந்நன்னாளை ஒட்டி 6—10—84 முதல் 10—10—84 வரை இடைவிடாமல் அனைத்து அருள் நிலையங்களிலும் யாகங்கள், வேள்விகள் நடைபெறுகின்றன. முடிந்தவர்கள் நேரிலும் இயலாதவர்கள் தத்தம் இல்லங்களில் பூசையில் அமர்ந்தும் அருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

● பதினெண் சித்தர்களின் 'பூசாவிதி நூல்' 5—9—84 அன்று மதுரையில் அ. வி. தி. தலைமை நிலையத்தின் பெருமுயற்சியால் வெளியிடப்பட்டுள்ளது. எளிமையான முறையில் பூசைகள், வழிபாடுகள், மந்திரங்கள்...... பற்றி முழுமையான விளக்கத்தோடு வெளிவந்துள்ளது. வேண்டுவோர் தொடர்புகொள்ளவும்.

● திருச்சி மாவட்டத்தில் சமயபுரம், காட்டூர் ஆகிய இரு இடங்களில் இ. ம. இ.யின் 'அருட்பணி விரிவாக்கத்திட்ட நிலையங்கள்' துவங்கி விரைந்து செயல்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சையிலும் விரிந்த அளவில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

---

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

தமிழ் வள வளர்ச்சி நிலை குறித்து பதினெண் சித்தர்கள் முறையில் சித்தர் நெறி எனும் 'ஓகாசனம், யோகாசனம்' மற்றும் அறிவியல் கலைகளும் இன்றைய 'இந்து மதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரார்' அவர்களால் துவக்கப்பட்டுவிட்டது. 'ஞாலகுரு' வால் உருவாக்கப்பட்ட 'சித்தரடியான்கள், சித்தரடியார்கள்' மூலமாக கற்றுத் தரப்படுகின்றது. ஆர்வமுடையவர்கள் இயக்கத்தில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்பு : இ. ம. இ. அலுவலக இருப்பாளர்
சித்தரடியான் ந. சண்முகம்
24/1, புத்தகரம் கிராமம்
இலக்குமிபுரம் அஞ்சல்–600 099.

---

## வருந்துகின்றோம்

'குருதேவர்' எட்டாவது அறிக்கையில் ''பஞ்சாப்பின் குர்பாணி'' என்ற கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட 'குர்பாணி' என்ற சொல்லை ''குருபாணி'' என்று திருத்தி வாசிக்கும்படி பணிவோடு வேண்டுகின்றோம். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகின்றோம்.

---

அச்சிட்டோர்: KVS பிரிண்டர்ஸ், 10 தேரடி தெரு, பொன்னேரி-601 204.

# இந்துக்களின் உய்வுக்கும் உயர்வுக்கும் உரியன

இந்துக்களே ஒற்றுமையைக் கற்றுக் கொள்ளுங்கள்!

இந்துக்களே ஒருமைப்பாட்டை விரும்பி ஏற்றிடுங்கள்!

இந்துக்களே அரசியல்வாதிகளின் சுயநலமே நமது தாழ்ச்சிகளுக்கும், சிதைவுகளுக்கும் காரணமென்பதைப் புரிந்து செயல்படுங்கள்.

இந்துக்களே இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர்களின் வரிசைத் தலைவராக ஏற்றிடுங்கள்.

இந்துக்களே இனியும் பிரிவினைகள் வேற்றுமைகள் தீண்டாமைகள் வளர்க்காதீர்கள்.

இந்துமதம், தனது தலைவரை, குருவை, குருக்களை, குருமாரை, பூசாறியை, மருளாளியை, அருளாளியை, பண்டாரத்தை, ஓதுவாரை, தேசிகரை, ஆசாறியாரை, ஆச்சாரியாரை, ஆதீனத்தை, தம்பிரானை, சன்னிதானத்தை...... மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், பதுக்கியும், ஒதுக்கியும், இழித்தும், பழித்தும்...... செயல்பட்டதால்தான் இந்துக்கள் அநாதைகளாகச்சொந்த நாட்டிலேயே அரசியல்வாதிகளின் துரோகங்களால் தொடர்ந்து தாக்குண்டும், தாழ்த்தப்பட்டும், சிதைந்து சீரழிந்து கிடக்கிறார்கள். இந்துமதவரலாறு வாழ்வியல், செயவியல் இலக்கியங்கள், தத்துவங்கள்... முதலிய அனைத்தையும் அநுபவப்பூர்வமாகப் பயிற்சிகளாகவும், சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும், வழங்கிட இந்துமதத்தை உண்டாக்கிய பதினெண் சித்தர்களின் நேரடி வாரிசு பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் தோன்றியுள்ளார். இந்துக்களே! இந்து மதத்தின் கருவான தமிழினமே உனது ஆச்சாரியாரை, ஆசாறியாரை, குருதேவரை குருமகா சன்னிதானத்தை, தலைமைப் பீடத்தை, மூல ஆதினத்தை, ஆதியநாதி கடந்த தம்பிரானை, அருளாட்சித் திருநாயகத்தை கருவறைப் பண்டாரத்தைப் புரிந்து தலைவராக, வழித் துணையாக, வழிகாட்டியாக ஏற்றிடு. இனியும் காலம் தாழ்த்தாதே! துரோகிகளைத் திருத்தி விரோதிகளோடு போரிட்டு வென்றிட உரிய காலம் நெருங்கிவிட்டது. உலக ஆன்மநேய ஒருமைப்பாடும்; உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும் விரைவில் அமைக்கப்பட்டால்தான் இன விடுதலைகள்! மொழி விடுதலைகள்! பண்பாட்டு விடுதலைகள் விளைந்திடும். இல்லையேல் அன்னியரின் கங்காணிகளும், கைக்கூலிகளும், சுயநலமிக்க போலித்தலைவர்களும் நம்மை அடிமை வாழ்வுக்கும் மிடிமை வாழ்வுக்குமுரிய அநாதைகளாக்கிடுவர்.

இந்துமத உணர்வே இந்திய ஒற்றுமை வளர்க்கும்!

இந்துமத உரிமையே இந்தியப் பண்பாடு காக்கும்

இந்துமத ஆட்சியே இந்திய இனங்களின் செழுச்சி!

இந்துமத எழுச்சியே வேற்றுமைப்பகைகளை அகற்றும்!

இந்துமதத் தந்தையே அவல கேவலங்களை அகற்றுவார்;

குருவே அனைத்துக்கும் கரு, தரு, திரு உரு என்பதையறி!

குருவை மறந்தோ துறந்தோ அருளுலகை உய்விக்க முடியாது!

இந்துக்களே விழித்தெழுங்கள்!

உங்களின் குருவின் துணையோடு காயந்திரி ஓதுங்கள்! கலசப்பூசை செய்யுங்கள், வாழ்வின் பொருள் புரிந்து வாழுங்கள், அருட்பணி விரிவாக்கத்திட்ட யாகப் பயனை அடைந்து குறைநீக்கம் பெறுங்கள். மலை முகடுகள், அடர்காடுகள், அலைகடலிடைத் தீவுகள், நாடு நகரங்கள்...என்று அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் அருனால் பொருளுலக இருளகற்று வதைப்புரிந்து செயல்படுங்கள். அருளாட்சி அமைப்போம்! வாரீர்! வாரீர்! வாரீர்!

---

ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் கோப்புகளிலிருந்து தொகுத்து

அளித்தவர்: தலைமைப் பொறுப்பாளர்: சி. கவிக்குமார் பொன்னேரி.